International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20-3 July - September 2026

Published on 14, Jul - Sep 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# கவிஞர் ஆண்டன் பெனியின்,' 'நிறமி' கவிதைத் தொகுப்பு: ஒரு பெண்ணியத் திறனாய்வு

**ஏ. கந்தவேலு**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் பா. முத்துச்சாமி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
பச்சையப்பன் கல்லூரி, சென்னை - 30

**Abstract**

Among contemporary Tamil poets, Anton Beni occupies a significant place, and feminist thought is profoundly articulated in his poetry collection Nirami. Anton Beni diverges from the mainstream perspectives on women commonly found among male poets. He cherishes woman as his fellow human being, and writes of her pain with honesty. Nirami, created by the poet Anton Beni as a significant feminist text, foregrounds feminist concerns such as gender inequality, resistance to patriarchy, woman's inner solitude, and love as a form of violence, along with imagery rooted in women's lived experience - and it is the examination of these that constitutes the aim of this paper. The paper further establishes that Anton Beni, as a male creative writer, possesses a poetic sensibility capable of genuinely touching the inner world of women.

**Keywords:** Anton Beni, Modern Tamil Poetry, Nirami, Feminism, Patriarchy, Gender inequality, Women’s language

**ஆய்வுச் சுருக்கம்**

நவீன தமிழ்க் கவிஞர்களில் குறிப்பிடத்தவராக விளங்கும் கவிஞர் ஆண்டன் பெனியின்,' நிறமி' எனும் கவிதை நூலில் பெண்ணிய சிந்தனைகள் அழுத்தமாக வெளிப்பட்டுள்ளன. ஆண் கவிஞர்களிடம் பெண்கள் பற்றிப் பொதுவாகக் காணப்படும் மைய நீரோட்டப் பார்வைகளிலிருந்து ஆண்டன் பெனி வேறுபடுகிறார். அவர் பெண்ணைத் தனது சக மனுஷியாக நேசிக்கிறார். பெண்ணின் வலிகளை நேர்மையாக எழுதுகிறார். கவிஞர் ஆண்டன் பெனி அவர்களால் முக்கியப் பெண்ணியப் பிரதியாக உருவாக்கப்பட்டுள்ள,' நிறமி' யில் வெளிப்படும் பாலின சமத்துவமின்மை, ஆணாதிக்க எதிர்ப்பு, பெண்ணின் அகத் தனிமை, அன்பு எனும் வன்முறை ஆகியப் பெண்ணியக் கூறுகள் மற்றும் பெண் வாழ்வு சார்ந்த படிமங்கள்,பெண் மொழி பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். மேலும் ஓர் ஆண் படைப்பாளியான ஆண்டன் பெனி பெண்ணின் மனதை உண்மையாகத் தொடும் கவி மனம் கொண்டவர் என்பதையும் இக்கட்டுரை நிறுவுகின்றது.

**முதன்மைச் சொற்கள்:** ஆண்டன் பெனி, தமிழ் நவீன கவிதை,நிறமி, பெண்ணியம், ஆணாதிக்கம், பாலின சமத்துவமின்மை, பெண்மொழி

## முன்னுரை

தமிழ் நவீன கவிதையில் பெண்ணியத்தின் தாக்கம் அதிகமாக இருந்து வருகின்றது. பெண்களின் வலிகளைப் பெண்கள் எழுதுவதே பெண்ணியப் படைப்புகளுக்கான தனி அடையாளமாக நிறுவப்பட்டாலும் ஆண்களின் படைப்புகளிலும் பெண்ணியத்தின் தாக்கத்தை உணர முடிகின்றது. பெண்ணின் மனதையும் உடலையும் பெண் மொழியில் எழுத ஆண் படைப்பாளிகளும் முயற்சி செய்கின்றனர். தமிழின் குறிப்பிடத் தக்கக் கவிஞர்களுள் ஒருவரான ஆண்டன் பெனியின்,' நிறமி' கவிதை நூலில் இடம் பெற்றுள்ளக் கவிதைகளை மையமாகக் கொண்டு ஓர் பெண்ணியத் திறனாய்வானது இக்கட்டுரையின் மூலம் நிகழ்த்தப்படுகின்றது.

## பெண்ணியம் - சில அடிப்படைக் கருத்துகள்

ஆக்ஸ்ஃபோர்ட் அகராதி, "பெண்ணியம் என்ற சொல்லுக்குப் பெண்களின் தேவையை நிறைவேற்ற அவர்கள் சார்பாக வாதாடுவது, போராடுவது" என்ற பொருளைத் தந்துள்ளது எனலாம். பெண்ணியத் திறனாய்வாளரான முனைவர் இரா. பிரேமா, “பெண்ணியம்” என்பதற்குப் பல விளக்கங்கள் தரப்பட்டு வருகின்றன. அவ்விளக்கங்களுக்கிடையே வேறுபாடுகள் இருந்தாலும், அடிப்படையில் அவை பெண்ணியம் என்பதற்கு, 'பாலியல் சமத்துவம்' (Sexual Equality) என்ற பொருளைத் தந்து நிற்கின்றன. பரந்த அளவில், 'பெண்ணியம்' என்ற சொல்,' பெண் எந்த ஆணுக்கும் நிகரானவளே. எந்த நிலையிலும் எந்தக் காலத்திலும், அவள் அடக்கி வைக்கப்படக்கூடாது. தனிமைப் படுத்தி வைக்கப்படக்கூடாது / சார்பு நிலைப் படுத்தக் கூடாது' என்று பொருள்படுகிறது"[1] என்கிறார்.

ச. முத்துச் சிதம்பரம், "பெண்ணியம் என்ற சொல்லுக்குத் தெற்காசிய நாடுகள் பெண்கள் சமூகத்திலும், அலுவல்களிலும், வீட்டினுள் ளேயும் நசுக்கப்படுவதைப் பற்றிய விழிப் புணர்ச்சியும், அந்நிலையை மாற்றியமைக்க ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படும் முயற்சிகளும் என்ற விளக்கத்தை ஏற்றுக் கொண்டுள்ளன என்று கூறலாம்"[2] என்கிறார்.

பெண்ணியம் குறித்தப் பல்வேறு அறிஞர் களின் கருத்துக்களின்படி பெண்ணியக் கருத்தியலானது பாலின சமத்துவமின்மை, ஆணாதிக்க எதிர்ப்பு, பெண்ணின் தனிமைப் படுத்தப்பட்ட அகம் ஆகியவற்றை முதன்மைக் கூறுகளாகக் கொண்டிருக்கின் றன. குடும்ப அமைப்பில் அன்பு என்ற பெயரில் நிலவும் வன்முறைகளையும் பெண்ணியப் பிரதிகள் தீவிரமாகப் பதிவு செய்கின்றன எனலாம்.

## 'நிறமி'யில் காணலாகும் பாலின சமத்துவமின்மை

இந்தியச் சமூகமானது பாலின சமத்துவ மின்மை கொண்டதாக உள்ளது. முனைவர் இரா. பிரேமா," இச்சமுதாயம் பெண்களைப் பெண்ணாக மாறு, பெண்ணாகவே இரு, பெண்ணாகவே வாழ் என்று சொல்லி அவர்களை அடிமை வாழ்விற்கு உருப்படுத்தி விட்டது. எனவே பாலியல் அடிப்படையில் இச்சமுதாயம் உயர்நிலையை அடைய வேண்டும் என்றால் பால் வகை என்பது அழிக்கப்பட வேண்டும் என்று பெண்ணிய வாதிகள் கருதுகின்றனர்"[3] என்கிறார்.

பெண்ணியக் கூறுகளில் முதன்மையானதாகக் கருதப்படும் பாலின சமத்துவமின்மை பற்றி இந்நூலிலுள்ளக் கவிதைகள் பிரச்சாரத் தொனியின்றிக் கலையமைதியுடன் பேசுகின்றன.

"உன்னை / நானே எடுத்துப் /
பருகிக்கொள்ள

நினைக்கையில் / நீ/ ஆணாக
இருக்கிறாய்"[4]

எனப் பாலின சமத்துவமின்மையைப் பதிவு செய்கிறார் ஆண்டன் பெனி. தன்னுடைய காதலை ஒரு பெண் முழுமையாக வெளிப் படுத்தும் தருணத்தில்கூட ஒரு ஆண் தனது ஆண் என்றக் கட்டமைக்கப்பட்ட அதிகார பிம்பத்தைச் சுமந்து நிற்பதை இக்கவிதை அழுத்தமாக உணர்த்துகின்றது எனலாம்.

## 'நிறமி'யில் வெளிப்படும் ஆணாதிக்க எதிர்ப்பு

பெண்ணியப் படைப்புகளின் முக்கியக் கூறாக ஆணாதிக்க எதிர்ப்பு காணப் படுகின்றது. ஆணாதிக்கம் என்பது பெரும் பாலும் பெண்ணுடல் சார்ந்து இயங்குகின்றது எனலாம். பேரா. தேவதத்தா, "அதிகாரம் உடல் சார்ந்தது. இது அடக்கு முறையை உற்பத்தி செய்கிறது"[5] என்கிறார்.

ஆண்டன் பெனியின் கவிதைகளில் பெண்ணுடல் மீது ஆண் செலுத்தும் அதிகாரம் வீரியமாக வெளிப்படுகின்றது.

**ராஜாளிப் / பறவைதான் நீ / கூர்மையான/ அலகினால்**

**என்னை முத்தமிடாதே / கொடூர / நகக்கால்களோடு**

**வந்தென்மீது / அமராதே[6]**

இக்கவிதை பெண் மொழியில் எழுதப் பட்டுள்ளது. ராஜாளிப் பறவை போன்ற ஆண் கூர்மையான அலகின் மூலம் முத்தமிட்டுக் கொடூர நகக் கால்களோடு பெண்ணின் மீது வந்தமர்ந்து வல்லாதிக்கம் செய்வதை இக்கவிதை பதிவு செய்கின்றது. ஆணின் கொடூர நகக் கால்கள் பெண் உடலைக் கீறி ஆதிக்கம் செய்வதைக் கவிஞர் ஆன்டன் பெனி இரத்தம் கசியும் வரிகளாக வெளிப்படுத்தியுள்ளார்.

### 'நிறமி' உணர்த்தும் பெண்ணின் அகத் தனிமை

பெண்ணியப் படைப்புகளில் பெண்ணின் அகத் தனிமையானது முக்கியப் பாடு பொருளாக உள்ளது. குடும்ப அமைப்பை இயக்குவதில் முக்கியப் பங்கை வகித்தாலும் பெண்ணின் மனதானது தனிமைப்படுத்தப் பட்ட நிலையில்தான் உள்ளது. குறிப்பாகப் பெண்களின் இரவுகள் முழுவதும் தனிமைத் துயர் நிரம்பியிருப்பதை பெண்ணியக் கவிதைகள் அதிகம் பதிவு செய்துள்ளன.

ஆண்டன் பெனியின், 'நிறமி' கவிதை நூலில் பெண்ணின் தனிமையைப் பாடும் பல வரிகள் உள்ளன. இரவுகளில் பெண்ணிற்கு ஏற்படும் அகத்தனிமையின் துயரை நுட்பமாக வெளிப்படுத்துகின்றன ஆண்டன் பெனியின் கவிதைகள்.

**என் தனிமை பற்றி / ஒரு பறவையிடம் கேள்**

**அதன் அலகினும் கூர்மையானது/ அது7**

தன் தனிமை பற்றி ஒரு பெண் பறவையிடம் கேட்கச் சொல்வதாக இக்கவிதையின் கூற்று முறை அமைந்துள்ளது. பறவையின் கூர்மை யான அலகுடன் பெண்ணின் தனிமையை ஒப்பிடுகிறார் கவிஞர். பெண்ணின் தனிமைத் துயரைப் புரிந்து கொள்ளாமல் ஆண்கள் புறக்கணிப்பதை ஆண்டன் பெனி இந்நூலில் பல்வேறு கவிதைகளில் தொடர்ச்சியாகப் பதிவு செய்துள்ளார்.

### 'நிறமி'யில் வெளிப்படும் அன்பு எனும் வன்முறை

தமிழ் நவீனகவிதையில் அன்பின் வன்முறை குறித்து அதிகம் பேசப்பட்டுள்ளது. குறிப்பாகப் பெண்ணியக் கவிதைகள் காதலி லும், குடும்ப அமைப்பிலும் வெளிப் படும் அன்பின் வன்முறையைக் காத்திரமாகப் பதிவு செய்கின்றன.

குடும்ப அமைப்பில் காணப்படும் அன்பின் வன்முறையைக் கூர்மையாகப் பதிவு செய்கிறார் ஆன்டன் பெனி.

**நீ ஓய்வுறும் நேரங்களில் / தரும் அன்பும்**

**எனக்கு இன்னொரு வேலையாக இருக்கும்[8]**

அன்பின் வன்முறையை இதைவிட அழுத்த மாகச் சொல்லமுடியாது. பெண்ணின் வலியை உண்மையாக உள்வாங்கிய ஒருவரால் மட்டுமே இவ்வளவு வீரியமான பெண்ணியம் சார்ந்த கவிதை வரிகளை எழுத முடியும்.

### 'நிறமி'யில் காணப்படும் பெண் சார்ந்த படிமங்களின் சிறப்புகள்

புதுக்கவிதை உத்திகளுள் படிமம் முதன்மை யானதாக உள்ளது. புதுக்கவிதையின் மொழியானது படிமம் மூலமே இயங்கு கின்றது. புதுக்கவிதையில் படிமத்தின் பங்களிப்பு பற்றித் திறனாய்வாளர் பாலா, "சிறந்த கவிஞர்கள்தான் படிமத்தைத் திறம்படக் கையாள முடியும். படிமத்தின் பணி சிக்கலானது. கற்பனையை எழுப்புகிற அதே நேரத்தில் அது அறிவின் விசாரணை யையும் அழைக்கிறது"[9] என்கிறார். புதுக் கவிதையில் படிம உத்தியைத் திறம்படக் கையாள்கிறார் ஆண்டன் பெனி.

ஆண்டன் பெனியின்,' நிறமி' கவிதை நூலில் பெண்ணின் வாழ்நிலையைக் குறிக்கும் பல சிறந்த படிமங்கள் வெளிப்பட்டுள்ளன. குறிப்பாக இந்நூலிலுள்ளக் கவிதைகளில் பறவை எனும் படிமம் அற்புதமாகப் பயன் படுத்தப்பட்டுள்ளது. பறவை எனும் படிமத்தைப் பெண்ணின் பல்வேறு மன நிலைகளுக்கும் நுட்பமாகப் பயன்படுத்தி யுள்ளார் கவிஞர்.

"என் அன்பை / இப்படிச் சொல்கிறேன்/ கேள்

வெளிச்சம்/ இருக்கும் வரைதான்
பறக்கும் / பறவையின் நிழல்"[10]

இக்கவிதை போலப் பெண்களின் நுண்ணிய மனவுணர்வுகளை பறவை எனும் படிமத்தின் மூலம் வெளிப்படுத்தும் பல்வேறு கவிதைகள் இந்நூலில் உள்ளன. இந்நூலில், 'இரவு' எனும் படிமமும் சிறப்பாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. இரவு எனும் படிமத்தைத் தீவிரப் பெண்ணிய வெளிப்பாட்டு உணர்வுடன் படைத்துள்ளார் ஆண்டன் பெனி.

## 'நிறமி'யில் வெளிப்படும் பெண் மொழி

"பெண்மொழி என்பது அரசியல்; பெண் இருப்பைப் பற்றியும் பெண் உடலைப் பற்றியும் மொழி மற்றும் சமூக, குடும்ப, நிறுவன வெளிகளில் உருவாக்கப்பட்டுள்ள அவளுக்கு எதிரான கருத்தாக்கங்களைச் சிதைப்பதும் அவற்றின் வன்முறைக்கு எதிராகக் குரல் எழுப்புவதும்தான் பெண்ணின் மாற்று அரசியல்"[11] என்கிறார் மாலதி மைத்ரி. பெண்ணிற்கான மாற்று அரசியலை முன்வைக்கும் பெண் மொழியைப் பெண் களால் மட்டுமே உருவாக்க இயலும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் பெண்களின் துயர்களையும், விடுதலையையும் ஆண் படைப்பாளிகளாலும் எழுதமுடியும் என்பதையும் மறுப்பதிற்கில்லை.

கவிஞர் ஆண்டன் பெனி,

"பூக்களை / நானே/ கோர்த்து
நானே / உதிர்ப்பதாக/ இருக்கிறது
என்னுடைய / இரவுகள்"[12]

எனப் பெண்களின் தீராததுயர்களை உருக்க மாகவும் உயிர்ப்புடனும் எழுதுகின்றார்.

## முடிவுரை

கவிஞர் ஆண்டன் பெனியின்,' நிறமி' கவிதைத் தொகுப்பில் பாலின சமத்துவ மின்மை, ஆணாதிக்க எதிர்ப்பு, பெண்ணின் அகத் தனிமை முதலான பெண்ணியக் கூறுகள் நுட்பமான கவிதைகளாகியுள்ளன. ஓர் ஆண் படைப்பாளியால் பெண்ணின் மனதைத் தொட்டு எழுத முடிந்திருப்பது பாராட்டுக்குரியது ஆகும். பெண்ணை சக மனுசியாகப் பார்க்கும் ஓர் ஆண், பெண் வாழ்வின் தீராத துயர்களைப் பெண் மனதின் மொழியிலேயே எழுதியக் கவிதை களாக,'நிறமி' நூலிலுள்ளக் கவிதைகளைக் கூறலாம் என்றால் மிகையல்ல.

## அடிக்குறிப்புகள்

1. இரா. பிரேமா, பெண்ணியம், ப - 12
2. ச. முத்துச்சிதம்பரம், பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், ப - 2
3. இரா. பிரேமா, பெண்ணியம் அணுகுமுறைகள், ப - 116
4. ஆண்டன் பெனி, நிறமி, ப-28
5. தேவதத்தா, மௌனத்தின் அதிர்வுகளும் மொழியும் - பெண், ப - 41
6. ஆண்டன் பெனி, நிறமி, ப- 31
7. ஆண்டன் பெனி, நிறமி, ப- 41
8. ஆண்டன் பெனி, நிறமி, ப- 85
9. பாலா, புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை, ப - 158
10. ஆண்டன் பெனி, நிறமி, ப- 75
11. மாலதி மைத்ரி, விடுதலையை எழுதுதல், ப- 78
12. ஆண்டன் பெனி, நிறமி, ப- 27

## துணைநூற்பட்டியல்

1. ஆண்டன் பெனி, நிறமி,படைப்புப் பதிப்பகம், கடலூர், 2020.
2. தேவதத்தா, மௌனத்தின் அதிர்வுகளும் மொழியும் - பெண், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2005.
3. பாலா, புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை, அகரம், சிவகங்கை, 1983.
4. பிரேமா.இரா, பெண்ணியம் அணுகுமுறைகள், தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1996.
5. பிரேமா.இரா, பெண்ணியம், பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 2024.
6. மாலதி மைத்ரி, விடுதலையை எழுதுதல், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2015.
7. முத்துச்சிதம்பரம்.ச, பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், முல்லை நிலையம், சென்னை, 2022.